**மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**கும்முடிப்பூண்டி**

| வழக்கு எண்: O.S. 385 /2019 | | |
|---|---|---|
| பெயர் : வெங்கடேசன் | வா.சா. 1 | நாள் : 16.09.2025 |

**9ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

4) அசல் வழக்கு எண்.584/1981 வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பாணையின் படி நான் நிறைவேற்று மனு தாக்கல் செய்து சொத்தின் சுவாதினத்தை பெறவில்லை என்றால் சொத்தின் அனுபவம் ஏற்கனவே என் வசம் இருந்ததால் நான் தனியாக மனு தாக்கல் செய்யவேண்டிய அவசியம்இல்லை. நீதிமன்றத்தின் மூலம் எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை பிரதிவாதிகள் எனக்கு தெரியாமல் கம்பெனிக்கு கிரையம் செய்து விட்டதால் அந்த கிரைய ஆவணம் செல்லாது என கோரி நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பொன்னேரி உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.584/1981 மூலம் சொத்து எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

5) சொத்தின் அனுபவம் என் வசம் இல்லாத காரணத்தினால் தான் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கோவிந்தன் என்பவர் யார் என்றால் அவர் காந்தம்மாளின் கணவர் ஆவார். கோவிந்தனும் அவரது குடும்பத்தாரும் அனுபவத்தில் இருந்த காரணத்தினால் தான் அவர் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. எந்த வருடத்தில் கோவிந்தன் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. 2012ம் ஆண்டில் தான் கோவிந்தன் பெயரில் பட்டா இருந்தது எனக்கு தெரிய வந்தது. பட்டாவை ரத்து செய்வதற்கு நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் வருவாய் துறை மற்றும் காவல் துறையில் புகார் அளித்தும் நடவடிக்கை இல்லாததால் இவ்வழக்கை தாக்கல் செய்தேன்.

6) நான் மேற்படி புகாரை மனுவாக அளித்தேன். மேற்படி மனுக்களை இவ்வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை. நான் அளித்த புகார் மனுக்கள் நிராகரிக்கப்பட்டதாக வாய்மொழியாக சொன்னார்கள். பட்டாவை ரத்து

செய்வதற்கு நான் உயர் நீதிமன்றத்தை நாடவில்லை என்றால் அந்த விவரம் பற்றி எனக்கு தெரியாது. 9ம் பிரதிவாதி எப்போது தாவா சொத்தை கிரையம் பெற்றார் என்று எனக்கு தெரியாது. (சாட்சி தற்போது 19.12.2012ல் 9ம் பிரதிவாதி கிரையம் பெற்றதாக கூறுகிறார்). 20.12.2014ல் நான் வழக்கறிஞர் அறிவிப்பை 9ம் பிரதிவாதிக்கு அனுப்பினேன். 9ம் பிரதிவாதி கிரையம் பெற்ற 2 வருட காலமாக நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் எனக்கு விவரம் தெரிந்த போது அறிவிப்பு அனுப்பினேன்.

7) 9ம் பிரதிவாதி பெற்ற கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலை பார்த்த பின்னர் தான் கிரையம் பற்றி தெரியவரும் என்று எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி சான்றிட்ட நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றாலும் தவறாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. நான் கல்கத்தாவில் அமைந்துள்ள 9ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். நான் 9ம் பிரதிவாதிக்கு 2 முறை அறிவிப்பு அனுப்பினேன் என்றால் இல்லை ஒரு முறை தான் அறிவிப்பு அனுப்பினேன் . எனது அறிவிப்பிற்கு 9 ம் பிரதிவாதி பதிலுரை ஏதும் வழங்கவில்லை.

8) என்னிடம் காட்டப்படும் ஆவணம் 1 முதல் 8 பிரதிவாதிகள் அனுப்பிய பதிலறிவிப்பு என்றால் இருக்கலாம் ஆனால் அது எனக்கு வரவில்லை. வா.சா.ஆ.5 பதிலறிவிப்பை நீதிமன்றத்தில் நான் தான் தாக்கல் செய்தேன். நீதிமன்ற சமரச தீர்ப்பை ஒப்பு கொண்டு 1 முதல் 8 பிரதிவாதிகள் எனக்கு பதிலறிவிப்பு அனுப்பினார்கள் என்று எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள நிலையில் அது போன்ற வாசகம் எதுவும் வா.சா.ஆ.5ல் இல்லை என்றால் சரிதான். நான் வழக்கறிஞர் அறிவிப்புடன் எந்த ஆவணத்தையும் அனுப்பவில்லை என்றும்,அதனால் சம்பந்தப்பட்ட ஆவணங்களை அனுப்பி வைக்குமாறு வா.சா.ஆ.5ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9) வழக்கு சொத்தை நான் அனுபவம் செய்து வருவது தொடர்பாக நீதிமன்ற உத்தரவை தவிர்த்து வேறு எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை. நான் தற்போதும் வழக்கு சொத்தில் அனுபவத்தில் தான் உள்ளேன். வழக்கு சொத்தில் தற்போது தைலமரம் உள்ளது. 9ம் பிரதிவாதி நிறுவனம் கும்மிடிப்பூண்டி சிப்காட் வளாகத்தில் அமைந்துள்ளது. வழக்கு சொத்தில் தொழிற்சாலை உள்ளது என்றால் இல்லை, ஆனால் நிறுவனம் சார்பில் செக்யூரிட்டி ஆட்களை நியமித்து உள்ளார்கள். என்னுடைய வழக்குரையில் குறிப்பிட்டுள்ள 9ம் பிரதிவாதியின் முகவரி வழக்கு சொத்தை தான் குறிக்கிறது என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்தின் அனுபவத்தில் இருந்தால் சுவாதினம் பரிகாரம் கோர வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

10) வழக்கு சொத்தின் அனுபவத்தில் நான் இல்லை என்றாலும் 9ம் பிரதிவாதியிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற தவறான எண்ணத்தில் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கை பற்றி முழுவிவரம் எனக்கு தெரியாத காரணத்தினால் இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை)**

ஓம்/– வெங்கடேசன்

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

R. Senthil Kumar, M.A., B.L.,
Digitally signed by R. Senthil Kumar, M.A., B.L.,
Date: 2025.09.16 12:48:18 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி